1970 மார்ச் 20]

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : (அ) சென்னை மாநகரில் தொழிலாளர் வகுப்பினருக்கான வாழ்க்கைச் செலவு குறியீட்டு எண் குறையவில்லை. ஆனால் சிறிது உயர்ந்துள்ளது. 1969-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 729-லிருந்து ஜூலை மாதத்தில் 730 ஆகவும், ஆகஸ்டு மாதத்தில் 737 ஆகவும் உயர்ந்துள்ளது. செப்டம்பர் மாதத்தில் 732-ஆக இறங்கி உள்ளது. அக்டோபர் மாதத்தில் 739 ஆகவும், நவம்பர் மாதத்தில் 747 ஆகவும் உயர்ந்துள்ளது.

(இ) கேள்விக்கு இடமில்லை.

Dr. H. V. HANDE : A few days ago I had asked a question why the cost of living index had not been released for February which is normally due in the first week of March? May I know the reasons for the delay in the release of cost of living report? Is it because it has increased further by a few points? Why has it not been released in the first week of March? Will the Hon. Minister be able to tell us the reasons?

மமாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: எங்கள் துறை புள்ளிவிவரம் தான் தயாரிக்கிறது. அதை வெளியிடுவது நாங்கள் அல்ல. ஆகவே இம்மாதம் வெளிவராதது எங்கள் குற்றம் அல்ல. இதுபற்றி நாங்கள் எழுதிக்கேட்டிருக்கிறோம். ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்கிற கணக்கை எடுத்துக்கொள்வதா கூடாதா என்பது பிரச்சினை. தொழிலதிபர்கள் அதைக் கணக்கிட வேண்டுமென்று கூறி இருந்தார்கள். அதுபற்றி எல்லாத்துறை அதிகாரிகளையும் கலந்துபேசியிருக்கிறார்கள். அதன் காரணமாக ஒரு முடிவுக்கு வர வேண்டியிருப்பதால்தான் காலதாமதமோ என்று நினைக்கிறேன். இதுபற்றி புள்ளிவிவர இயக்குநரிடம் கேட்டு இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்--விடைகள் முடிவடைந்தன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

3. அறிவிப்பு

கோவை மாவட்டத்தில் பேரவை உறுப்பினர்கள் சிலர் கைதுசெய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டது—குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் 144-வது பிரிவின்கீழ் விதிக்கப்பட்டிருந்த தடையை மீறியதற்காக, இ.பி.கோ. 143, 186 ஆகிய பிரிவுகளின்கீழ் கோவை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இப்பேரவையின் உறுப்பினர்கள் திருவாளர்கள்

1. க. ர. நல்லசிவன்
2. பி. வேலுச்சாமி
3. டி. டி. எல். திப்பையா
4. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்.

5. கே. என். குமாரசாமி

6. அ. சேனாபதி

ஆகியோர் 18---3---1970 அன்று கைது செய்யப்பட்டு பின் 19---3---1970 அன்று விடுதலை செய்யப்பட்டனர் என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

உறுப்பினர்கள் கைதுசெய்யப்பட்ட விவரம் 18---3---1970 அன்று மாலையும் அவர்கள் விடுவிக்கப்பட்ட விவரம் 19---3---1970 அன்று இரவும் எனக்கு அறிவிக்கப்பட்டது.

THIRU K. VINAYAKAM : On a point of information, Sir, May I know whether any cases were registered against them and, if so, under what section of what law?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த இன்பர்மேஷன் எல்லாம் பேரவைத் தலைவர் கொடுக்கிறதா?

THIRU K. VINAYAKAM : You refer to the rule. When you get information, you make a statement to the House. On that information, I have got the liberty to ask whether any cases have been registered.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோ, நோ, பேரவைத் தலைவர் இந்த அவைக்கு எந்தவிதமான அறிக்கையும் கொடுக்கவில்லை. எனக்குக் கொடுத்த தகவலை—எந்த அளவுக்குக் கிடைத்து இருக்கிறதோ அந்த அளவுக்கு---அறிவிக்கமுடியுமே தவிர அதற்கு மேலும் பேரவைத் தலைவர் இதிலே விவரம் அளிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு நம்முடைய சட்டப்பேரவை விதிகளிலேயும் இடம் இல்லை.

4. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

கோவை மாவட்டத்தில் பேரவை உறுப்பினர் சிலரும் விவசாயிகளும் கைது செய்யப்பட்டது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரும், திரு. பூவராகன் அவர்களும், திரு. சித்தன் அவர்களும் ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், —

Under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules, I hereby give notice of the following adjournment motion : "That the business of the House do stand adjourned to discuss an urgent matter of public importance, namely, the arrest of Legislators, leading agriculturists and farmers numbering several hundreds for holding peaceful agitation to protest against the rise in agricultural electricity power tariff at various centres in Coimbatore District on 18th March 1970"

என்று கொடுத்து இருக்கிறார்கள்.